பிட்ரேஷன் போர்டு' ஏற்படுத்தப்பட்டிருப்பதால் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கிறது. இம்மாதிரி முரண்பாடுகள் ஏன் ஏற்படவேண்டுமென்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI R. VENKATARAMAN : இரண்டு போர்டுகளுக்கும் எந்த விதமான முரண்பாடும் இல்லை. 'வேஜ் போர்டை' மத்திய சர்க்கார் நியமிக்கிறார்கள். பஞ்சாலைத் தொழில் 'வேலை பளு முதலியவற்றை நிர்ணயிப்பதற்காக 'ஆர்பிட்ரேஷன் போர்டுகளை' நாம் அமைக்கிறோம். இந்த போர்டுகளின் வேலை முறைகளில் எந்தவிதமான முரண்பாடும் ஏற்படாது என்று நான் நம்புகிறேன்.

அடுத்தப்படியாக இவைகளெல்லாம் நிறைவேற்றப்படுமா, நிறைவேற்றப் படாதா என்பது சட்டப் பிரச்னை. அதைப்பற்றி நான் இப்பொழுது ஒன்றும் சொல்வதற்கு இல்லை.

SRI K. ANBAZHAGAN: அவைத்தலைவர் அவர்களே, இத்தகைய தொழிலாளர்களுடைய கூலி பிரச்னையை தீர்ப்பதற்குக்கூட மாநில சர்க்காருக்கு தனி உரிமைகள் இல்லை என்று தெரிவிக்கின்ற அமைச்சர் மாநில சர்க்காரின் உரிமைகளை மிகுதிப்படுத்துவதற்கு ஏதேனும் தனி நடவடிக்கைகளை எடுக்க முற்படுவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

MR. SPEAKER : The hon. Member may put a separate question on that subject.

SRI P. S. CHINNADURAI : இந்த போர்டில் தொழிலாளர் பிரதிநிதிகளை நியமிப்பதற்கு முன்பாக எந்த அகில இந்திய தொழிலாளர் சம்மேளனத்தை இந்திய அரசாங்கம் கலந்துகொண்டார்கள் என்பதை கனம் தொழில் அமைச்சர் அவர்கள் கூறுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN : கனம் சின்னதுரை அவர்கள் பார்லிமெண்டிற்கு சென்று இந்தக் கேள்வியை அங்கு நன்றாகக் கேட்டிருக்கலாம்.

SRI M. KALYANASUNDARAM: மந்திரி அவர்கள் சிறிது நேரத்திற்கு முன்னர் மத்திய சர்க்கார் சம்மேளனத்தை கலந்துகொண்டு தொழிலாளர் பிரதிநிதிகளை நியமித்ததாக சொன்னார்கள். எந்த சம்மேளனத்தை கலந்துகொண்டார்கள் என்பதை அறியலாமா ?

THE HON. SRI R. VENKATARAMAN: மத்திய சர்க்கார் அகில இந்திய சம்மேளனத்தை கலந்துகொண்டு நியமித்ததாக எங்களுக்குச் சொல்லுகிறார்கள்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

Emoluments of the non-gazetted officers and last-grade servants

* 4 *Q*.—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Finance be pleased to state whether the Government have made any representation to the Finance Commission at its sittings in Madras during March 1957, regarding the demand of the non-gazetted officers and the last-grade staff of the State Government for revising their scales of pay and dearness allowance on the basis of the Central Pay Commission's recommendations?

THE HON. SRI C. SUBRAMANIAM : Yes, Sir. But I would like to state that the representation has reference to dearness allowance mostly.

SRI M. KALYANASUNDARAM : கனம் மந்திரி அவர்கள் பஞ்சப்படி சம்பந்தமாக மட்டும் தெரிவித்திருப்பதாக குறிப்பிட்டார்கள். மத்திய சம்பளக் கமிஷன் செய்திருக்கக்கூடிய சிபார்சுகளை அப்படியே ராஜ்ய சர்க்கார்

[3rd May 1957

சிப்பந்திகளுக்கும் அமுல் நடத்தவேண்டும் என்ற கோரிக்கையை வற்புறுத் தாமல் இருப்பதற்குக் காரணங்கள் உண்டா ? மத்திய சர்க்கார் அதற்காக நிதி சகாயம் செய்யவேண்டுமென்று என் கேட்க முன்வரவில்லை ?

Even in regard to the question of salaries, why did not the Government make a representation that the salaries shall be on a par with the Central Pay Commission's recommendations?

The Hon. Sri C. SUBRAMANIAM : மத்திய சர்க்கார் விகிதப்படி பஞ்சப்படியை கொடுப்பதற்கே ரூபாய் 8½ கோடி ஆகிறது. இதை சரி செய்வ தற்கே கஷ்டமாக இருக்கிறது. அப்படியிருக்கையில் ஆகாத காரியத்தை, அதாவது சம்பள விகிதத்தை கிளப்புவது விஷயத்தை வீணுக நீட்டிக் கொண்டிருக்குமே ஒழிய வேறு ஒன்றும் காரியம் ஆகாது.

Sri C. R. RAMASWAMI : கடைநிலை ஊழியர்கள் நமது அரசாங்கத் திற்கு தங்களுடைய குறைகளைப்பற்றி ஏதாவது விண்ணப்பம் சமர்பித் திருக்கிறார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : எத்தனையோ விண்ணப்பங்கள் சமர்ப்பித்திருக்கிறார்கள்.

Sri N. K. PALANISAMI : கெஜட் பதவி இல்லாத உத்தியோகஸ்தர் களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுத்தால் மத்திய சர்க்கார் மூன்றில் ஒரு பகுதியை ஏற்றுக் கொள்வதாகச் சொல்லியிருக்கிறார்கள். அதன் பிரகாரம் அவர்களுக்கு சம்பளத்தை என் உயர்த்தக்கூடாது ? மேலும், அதற்காக சர்க்கார் ஒரு கமிஷனை நியமித்து அதை விசாரிப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அங்கத்தினர் மத்திய சர்க்கார் மூன்றில் ஒரு பங்கு கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருப்பதாகச் சொல்லுவது சரியான தகவல் அல்ல. சில பகுதிகளுக்கு அரை பங்கும், மற்ற பகுதி களுக்கு மூன்றில் ஒரு பங்கும் கொடுப்பதாக ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதாவது பஞ்சப்படியை ரூபாய் 12 வரையில் அதிகப்படியாக உயர்த்துவ தற்கு ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். நாமும் அந்த அளவுக்கு இப்பொழுது உயர்த்தியிருக்கிறோம்.

Sri K. SATTANATHA KARAYALAR : Will the Government appoint a Pay Commission to rationalise the pay of the Government servants?

The Hon. Sri C. SUBRAMANIAM : It is not a question of rationalisation. But it is a question of finding sufficient resources to meet the demands.

Sri C. R. RAMASWAMY : மந்திரி அவர்கள் எவ்வளவோ விண்ணப் பங்கள் சமர்ப்பிக்கப்பட்டதாகச் சொன்னார்கள். அந்த விண்ணப்பங்களுக்கு விமோசனம் உண்டா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : அவைகள் காரணமாகத்தான் ரூபாய் 12 இப்பொழுது பஞ்சப்படி உயர்த்தப்பட்டிருக்கிறது.

Sri T. S. RAMASWAMY PILLAI : பஞ்சப்படி ரூபாய் 12 அதிகமாக கொடுக்கப்பட்டிருப்பதாக கனம் நிதி மந்திரி அவர்கள் கூறினார்கள். அந்த அளவுக்கு இப்போது சென்னை ராஜ்யத்தில் சேர்ந்துள்ள புதிய பகுதிகளில் உள்ள, அதாவது கன்னியாகுமரி ஜில்லாவிலும் செங்கோட்டை தாலூகாவிலுமுள்ள கெஜட் பதவியில்லாத உத்தியோகஸ்தர்களுக்கும் இந் தப் பஞ்சப்படி உயர்வு கொடுக்கப்பட்டிருக்கிறதா ? கொடுக்கப்படவில்லை என்றால், என் என்று கேட்க விரும்புகிறேன் ?

3rd May 1957]

The Hon. Sri C. SUBRAMANIAM : அப்படி கொடுக்கப்படவில்லை என்ற தகவலை சொல்லிக்கொண்டு, அதற்குக் காரணம் வேண்டுமானால் தனி கேள்வி போடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

Sri M. P. SUBRAMANIAM : பஞ்சப்படி திடீரென்று பஞ்சம் வந்த காலத்தில்தான் கொடுக்கவேண்டிய படி. பத்து ஆண்டு காலம் நீடித்து அந்தப்படி கொடுக்கப்பட்டும் வாழ்க்கைத்தர புள்ளி அதிகமாக உயர்கிறதே ஒழிய குறைவதற்கு அறிகுறிகள் இல்லை. ஆதலால் பஞ்சப்படியை சம்பளத்தில் இணைப்பதற்கு இதுவரையில் அரசாங்கத்திற்கு ஏதாவது யோசனை இருக்கிறதா ? இல்லாவிட்டால் பாதி பஞ்சப்படியையாவது அடிப்படை சம்பளத்தோடு இணைக்க முடியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : கனம் அங்கத்தினர் கேள்வி என்னவென்று பார்த்திருந்தால், இந்த உபகேள்வியை போட்டிருக்க மாட்டார்கள். இந்த உபகேள்விக்கும் அதற்கும் சம்பந்தமில்லை.

Sri M. KALYANASUNDARAM : பஞ்சப்படிக்கு மட்டுமே ரூபாய் 8½ கோடி ஆகுமென்று மந்திரி அவர்கள் பயமுறுத்தினார்கள். ஏற்கெனவே ரூபாய் பன்னிரண்டு கொடுக்கப்பட்டு விட்டது. ஆகவே, இது முன் கணக்காக இருக்கும் என்று நினைக்கிறேன். அப்படியே வைத்துக் கொண்டாலும் மத்திய சர்க்காருக்கு சம்பளத்தையும் பஞ்சப்படியையும் உயர்த்துவதில் பொறுப்பு இல்லையா ? மத்திய சர்க்காரிடத்தில் சம்பளத்தையும் உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று வற்புறுத்துவதற்கு நமது சர்க்கார் ஏன் தயங்கவேண்டும் ?

The Hon. Sri C. SUBRAMANIAM : நிதிக் கமிஷனிடம் என்ன தகவல்கள் கொடுத்தோம் என்பதைப் பற்றி இந்தக் கேள்வியில் பதில் சொன்னேன். மத்திய சர்க்காரிடம் என்ன செய்திருக்கிறோம் என்று தகவல் வேண்டுமானால் தனியாகக் கேள்வி போடவேண்டும்.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : ஜில்லா போர்டு, முனிசிபாலிடிகள் ஊழியர்களைப்பற்றி ஏதாவது சொல்லப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri C. SUBRAMANIAM : எல்லா ஊழியர்களையும் பற்றி தான் அதில் கண்டிருக்கிறது.

Sri K. R. VISWANATHAN : பஞ்சப்படியையோ அல்லது அடிப்படை ஊதியத்தையோ இனிமேல் அதிகப்படுத்துவது நிதிக் கமிஷன் அறிக்கை வெளிவந்த பிறகு தான் என்று கெஜட் பதிவு இல்லாத உத்தியோகஸ்தர்களிடம் திட்டவட்டமாகச் சொல்லியது உண்டா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : ஆம், அப்படித்தான் சொல்லியிருக்கிறேன்.

Sri A. GOVINDASAMY NAYAGAR : சோஷலிஸ்ட் சமுதாயத்தை உருவாக்கப்போகிறோம் என்று சொல்லிக்கொண்டு, அது நடைமுறையில் வரும் அளவுக்கு என். ஜி. ஓக்களுக்கு "பே கமிஷன்" விகிதப்படி சம்பளத்தை உயர்த்துவதற்கு துண்டு விழும் தொகையை சரிகட்டுவதற்கு மத்திய சர்க்காரிடமிருந்து நிதி கோர நம் அரசாங்கம் முன்வருமா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : Sir, I have already pointed out that this question refers to the representation the Madras Government made to the Finance Commission. All the other questions are not quite relevant.

SRI M. KALYANASUNDARAM : மத்திய சர்க்கார் தெரிவித்திருப்பது ஒரு புறமிருக்க, சம்பளம், பஞ்சப்படி விஷயத்தில் பொதுவாக ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளுக்கும், இன்னும் கடைநிலை சிப்பந்திகளுக்கும், கிராம ஊழியர்களுக்கும் அதிருப்தி இருந்துவரும் காரணத்தினாலே, இதை எந்த அளவுக்கு உயர்த்தவேண்டும் என்பதை நிர்ணயிக்க ராஜ்ய சர்க்கார் ஒரு சம்பளக் கமிஷனை நியமிப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : நான் இதற்கு முன்பே சொன்ன பிரகாரம் இதிலே ஒரு கமிஷனை நியமித்து அதன் யோசனைகளை கேட்க வேண்டிய அவசியமில்லை. நமது நிதி நிலைமைக்கு தகுந்தாற்போல் எவ்வளவு தூரம் கொடுக்முடியுமோ அந்த அளவுக்கும் கொடுத்திருக்கிறோம். ஆகையினால் நிதிக் கமிஷன் முன்பு நமக்கு பணம் ஒதுக்கும்பொழுது இதையும் சேர்த்து கவனிக்கவேண்டுமென்று சொல்லியிருக்கிறோம். இந்த அதிருப்தியை அதிகமாக வளரவிடாமல் அங்கத்தினர்களும் பார்த்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

SRI K. RAMACHANDRAN : பஞ்சப்படியை பொறுத்தவரைக்கும் மத்திய சர்க்கார் ராஜ்ய சர்க்கார்களுக்கு மான்யம் கொடுக்கிறார்கள். சம்பளத்தை பொறுத்தவரையில் நம்முடைய நிதியிலிருந்து உயர்த்துவதற்கு ஏதாவது சர்க்கார் முயற்சி செய்வார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : நம்முடைய நிதி நிலைமை பற்றி பட்ஜெட் வெளியாகும்பொழுது அங்கத்தினர் உணர்வார்கள். அப்பொழுது இந்த யோசனையைச் சொன்னால் எவ்வளவு பொறுத்தமாக இருக்குமென்று அவர்கள் உணர்ந்து கொள்வார்கள்.

SRI N. K. PALANISAMI : பஞ்சப்படி ரூபாய் 12 உயர்த்தப்பட்ட பிறகு தசாம்ச நாணய முறை புகுத்தப்பட்டதன் காரணமாக விலைவாசிகள் இன்னும் அதிகமாகிவிட்டது. ஆகவே, சர்க்கார் பஞ்சப்படியை இன்னும் அதிகப்படுத்த முடியுமா ? அல்லது அவர்கள் வாங்கக்கூடிய உணவுப் பொருள்களுக்கு " Subsidy " கொடுக்க முடியுமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : Sir, I can tolerate a little bit of irrelevancy, but not total irrelevancy.

12 noon. **SRI M. KALYANASUNDARAM :** ராஜ்ய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் ஊழியர்களுக்கும் பஞ்சப்படியை ரூபாய் 12 அதிகப்படியாக உயர்த்தியிருப்பதாக கனம் மந்திரி அவர்கள் சொன்னார்கள். கிராம ஊழியர்களுக்கும், அதாவது கணக்குப்பிள்ளை, மணியம், வெட்டியான், தலையாரி முதலியவர்களுக்குச் சம்பளத்தை உயர்த்தும் பிரச்னை எந்த மட்டில் இருக்கிறது ? அது சம்பந்தமாக சர்க்கார் ஏதாவது முடிவு எடுத்து விட்டார்களா ? இது விஷயமாக நிதி உதவி வேண்டுமென்று நிதிக் கமிஷனைக் கேட்டிருக்கிறார்களா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : A separate question may be put.

SRI A. GOVINDASAMY NAYAGAR : மத்திய சர்க்காரிடமிருந்து நிதி உதவியை எதிர்பார்ப்பதற்குப் பதிலாக, ராஜ்ய சர்க்காரே வரி போட்டுக் கொள்ளலாமென்று நிதிக் கமிஷன் தலைவர் ஸ்ரீ சந்தானம் கூறியிருப்பது கனம் நிதி அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ? அவ்வாறு தாக்கீது ஏதாவது வந்திருக்கிறதா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : எனக்கு அவ்வாறு தாக்கீது ஒன்றும் வரவில்லை. ஸ்ரீ கோவிந்தசுவாமி அவர்களுக்கு ஏதாவது வந்திருந்தால் அதைப் பார்ப்பதற்குத் தயாராயிருக்கிறேன்.

MR. SPEAKER : Questions are over.